## <u>பொதுமக்களுக்கான அறிவித்தல்</u>

2024 ஆம் ஆண்டின் நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்துவது குறித்த அவதானிப்புகள், கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு அனைத்து உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகங்கள் உட்பட பொதுமக்களைக் கோருதல்.

அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க, 2024 யூலை 31 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தங்களை கவனத்திற் கொள்ளவும், பொதுமக்களிடம் கருத்து கேட்டு தேவையான பரிந்துரைகள் சமர்பிக்கவும்> பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான கௌரவ அமைச்சரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அதன்படி, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து ஒரு (01) மாதத்திற்குள், 2024 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்துவது குறித்து அவதானிப்புகள், கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை பொதுமக்களிடம் இருந்து கோர அக்குழு தீர்மானித்துள்ளது.

உங்கள் அவதானிப்புகள், கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு இல.19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்னும் முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பலாம். கடித்த்தின் இடது மூலையில் “2024 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்தவதற்கான குழு” எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். மாற்று வழியாக, உங்கள் கருத்துக்களை ”2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டம்” எனும் தலைப்பின் கீழ் **legal@moj.gov.lk** எனும் மின்னஞ்சல் முகவரி மூலமும் அனுப்ப முடியும்.

**செயலாளர்,**

2024 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்துவதற்கான குழு.